**கல்குடா கல்வி வலய, பாடசாலைகளின் சுய கற்றல் செயற்பாட்டு பரீட்சைக் குழு**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை-புதிய பாடத்திட்டம் 2020**

தமிழ் 1 (மாதிரி வினாத்தாள்:06)
# Tamil I

**72 T I**

**மூன்று மணித்தியாலம்**
**மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம்**

- வினாப்பத்திரத்தை வாசித்து,வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமைவழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

- **அறிவுறுத்தல்கள்**:பகுதி1இல் உள்ள 1ஆம்,2ஆம் வினாக்களுக்கும், பகுதி11 உள்ளவற்றுள் எவையேனும் மூன்றுவினாக்களுக்கும் எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக

## பகுதி 1

**1.மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

**(i)** ஒருநாள் செல்லலம் இருநாள் செல்லலம்
பன்னாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாள் போன்ற விரும்பினன் மாதோ
அணிபூண் யானை இயல்தேர் அஞ்சி
அதியமான் பரிசில் பெறூஉங் காலம்
நீட்டினும் நீட்டா தாயினும் யானைதன்
கோட்டிடை வைத்த கவளம் போல
கையகத் தது அது பொய்யா காதே!
அருந்தே மாந்த நெஞ்சம்
வருந்த வேண்டா வாழ்க அவன்றாளே!

(அ) இப்பாடல் இடம் பெற்ற திணை பற்றி விளக்குக.
(ஆ) அதியமானின் கொடைச்சிறப்பு எவ்விதம் காட்டப்படுகிறது?
(இ) இப்பாடலில் வெளிப்படும் புறத்திணை இலக்கிய மரபுகளை எடுத்துக் கூறுக.

**(ii)** இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீஅலால் பிறிதுமற்று இன்மை
சென்றுசென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாய்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ அல்லை அன்றியொன்று இல்லை
யார் உன்னை அறியகிற் பாரே.

(அ) இப்பாடல் இடம் பெற்ற சந்தர்ப்பம் எது?
(ஆ) இப்பாடலில் இடம் பெறும் அணியை எடுத்து விளக்குக.
(இ) இப்பாடலில் வெளிப்படும் பல்லவர்கால இலக்கியப்பண்புகளை எடுத்துக்காட்டுக.

(24 புள்ளிகள்)



Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk

02. ‘அ’பகுதியிலுள்ள கவிதையைப் **அல்லது** ‘ஆ’ பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) காயுருட்டலானார்-சூதுக் களி தொடங்கலானர்
மாய முள்ள சகுனி- பின்னும் வார்த்தை சொல்லு கின்றேன்
நீ அழித்த தெல்லாம்- பின்னும் நின் னிடத்து மீளும்
ஓய் வடைந்திடாதே- தருமா! ஊக்க மெய்து கென்றான்

கோயிற் பூசை செய்வோர் - சிலையைக் கொண்டு விற்றல் போலும்
வாயில் காத்து நிற்போன் - வீட்டை வைத் திழத்தல் போலும்
ஆயிரங்க ளான – நீதி யவை உணர்ந்த தருமன்
தேயம் வைத் திழந்தான் - சிச்சீ! சிறியவர் செய்கை செய்தான்

நாட்டு மாந்தரெல்லாம் - தம்போல் நரர்களென்று கருதார்
ஆட்டு மந்தையாமென் - றுலகை அரசரெண்ணிவிட்டார்
காட்டு முண்மை நூல்கள் - பல தாங் காட்டினார்களேனும்
நாட்டு ராஜ நீதி – மனிதர் நன்கு செய்யவில்லை

ஓரஞ் செய்திடா மே – தருமத் துறுதி கொன் றிடாமே
சோரஞ் செய்திடா மே – பிறரைத் துயரில் வீழ்த்திடாமே
ஊரை யாளு முறைமை – உலகில் ஓர் புறத்துமில்லை
சாரமற்ற வார்த்தை! – மேலே சரிதை சொல்லுகின்றோம்.

(i) இக்கவிதையில் வெளிப்படும் சூதின் இழிவுகளை எடுத்துக்காட்டுக.

(ii) தருமனின் நிலையைப் பாரதி கூறும் விதம் எத்தகையது?

(iii) பாரதியார் சிறந்த ஆட்சித்தலைவனுடைய இலட்சணங்களென இக்கவிதையில் எவற்றைக் கூறுகின்றார்?

(iv) சூது மீண்டும் தொடங்குதல் பகுதியில் காணப்படும் சிறப்புக்களை எடுத்துக்காட்டுக.

(ஆ)பழங்கதைகளை நமக்குள்ளே பேசிக்கொள்வதில் எய்துதற்குரிய பிரயோசனம் யாதுமில்லை. நாற்றிசை மக்களும் நமது நாகரிகத்துக்கு ஏற்றமுரைக்கவேண்டுமென நாமெண்ணுவோமாயின் தமிழ் நூல் பொதிந்த கருவூலத்தினுள்ளேயமைந்துகிடக்கும் நன்மணிகளையெடுத்து அவற்றினது மதிப்பை யாம் பிறருக்கு உணர்த்துதல்வேண்டும். பிறநாட்டிரிடத்திலுள்ள அரிய பெரிய விஞ்ஞான நூல்களையும் பிறவற்றையும் மொழிபெயர்த்துத் தமிழுக்கு உரிமையாக்கவேண்டும். அனைவரு மெளிதிலுணர்ந்துகொள்ளத்தக்க இலகுவாகிய தமிழ்நடையில் உயிர்க்குறுதி பயக்கும் உயர்ந்த சாத்திரங்களை எழுதுவித்தல்வேண்டும். தேகத்துக்கு வலிமையும் மனத்துக்கு உறுதியுந் தரத்தக்க எண்ணங்கள் தமிழ்நாடெங்கும் பரவுதற்கு முயற்சித்தல்வேண்டும்.



kalvi.lk

ஒரு தேசத்தில் வாழுகின்ற மக்கள் தமது அரசியல் நிலை,பொருளாதார நிலை, சமூக வாழ்க்கை நிலை என்பவற்றைச் சீர்படுத்திக் கொள்ள முயல்வாராயின் முதலிலே தாம் எய்த வேண்டுமென்றெண்ணுகிற நிலையை அவர் தம் மனத்திடையே தெளிவுற உருவகப் படுத்தி கொள்ளுதல் வேண்டும். இது உத்தமக் கவிகளினுடைய கருத்தினை நுனித்துநோக்கி அமைக்குந் தரத்தது.

இந்நாளில் நடந்து வருகின்ற நாகரிக வழக்கங்களுக்கும், பல தேசத் தொடர்புகளுக்கும் இயைபாகும் படி நித்தியமான உண்மைகளை மக்களுடைய உள்ளத்தில் படியும் படியாக எடுத்துச் சொல்லும் ஆற்றலுடையவனே தன்னுடைய நாட்டுக்குப் புத்துயிரளிக்க வல்ல உண்மைக் கவியாவான். இத்தகைய ஒரு கவிதையைத் தமிழ்நாடு பெற்றது இந்நாடு செய்த பெருந்தவப்பயனே ஆகும்.கவியரசராகிய சுப்பிரமணிய பாரதியார் இவ்வுலக வாழ்வை நீத்துப் பலவருடங்களாகவில்லை. இதற்கிடையில் அவருடைய கவி தேசமெங்கும் செறிந்து நாட்டிலுள்ள மக்களுக்குப் புத்துயிரளித்து வருகின்றது. இத்தகைய கவி சிரேட்டர்கள் இன்னும் பலரை இந்நாட்டில் உதிக்கச் செய்யுமாறு உலக மாதாவாகிய பராசக்தியை வேண் டிக்கொள்வோமாக.

வடமொழியில் இருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட வேண்டிய பல நூல்கள் மிகப் பலவிருக்கின்றன. நியாயம்,வைசேஷிகம்,சாங்கியம்,யோகம்,பூர்வமீமாம்சை,உத்தரமீமாம்சை என்கின்ற வேறுவகைப்பட்ட தத்துவ விசாரணை நூல்களை மேல்நாட்டாசிரியர்கள் தம் மொழியில் பெயர்த்தெழுதித் தமக்கு உரிமையாக்கிக் கொண்டனர்.வேத வேதாந்தங்களுக்கு மொழிபெயர்ப் பும்,உரையும் ஆங்கிலம் முதலிய மேனாட்டு மொழிகளில் உண்டு. தமிழிலோவென்றால் சூத்திரருக்கும் பெண்களுக்கும் தகவுடையனவெனக் கூறப்பட்ட சில புராணக்கதைகள் மாத்திரமே மொழிபெயர்க்கப்பட்டிருகின்றன. சிற்பம்,ரசாயனம்,ஆயுர்வேதம்,அர்த்தவேதம், தநுர் வேதம், காந்தர்வ வேதம், கணிதம்,தருக்கம் என்றின்னன பலவாய துறைகளிலே கடல் போல விரிந்து கிடக்கின்ற சாத்திரங்களைத் தமிழிலே மொழிபெயர்த்தெழுதினால், அதனால் விழையக்கூடிய நலத்திற்கு எல்லை கூற முடியுமா? வடமொழியிலுள்ள நூல்களைத் தமிழில் பெயர்த்தெழுத முயல்வது சிறந்த தமிழ்த் தொண்டாகும்.

(i) பாரதி பற்றி சுவாமி விபுலானந்தர் கூறும் கருத்து யாது?

(ii) தமிழ்மொழியில் மொழிபெயர்க்கப்பட வேண்டும் எனக் கட்டுரையாசிரியர் கூறும் நூல்கள் எவை?

(iii) கட்டுரையாசிரியரின் மொழிநடைச் சிறப்பு பற்றி யாது கூறுவீர்?

(iv) சிறந்த தமிழ்த்தொண்டு எனக் கட்டுரையாசிரியர் எதனைக் கூற முயல்கின்றார்?

(16 புள்ளிகள்)

## பகுதி 11

03. திருவள்ளுவரின் **தெரிந்து தெளிதல்** எனும் அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டுபின்வருவனவற்றை விளக்குக.

(அ) தக்கவர்களைத் தெரிந்து தெளிதல், ஒருவரிடத்து உள்ள குணங்குற்றங்களை ஆராய்ந்து குணம் மிக்கவராயின் தெளிதல்

(ஆ) ஒருவருடைய குணங்குற்றங்களை ஆராய்வதற்குரிய வழி

(இ) தெளியப்படாதவர்கள் யாவர், அவர்களைத் தெளிவதால் ஏற்படக் கூடிய இழிவு,தெளிவதற்கான எல்லை

(20 புள்ளிகள்)



kalvi.lk

04. **கம்பராமாயணம் குகப்படலத்தில்** பெருஞ்சேனையுடன் கங்கைக் கரையை வந்தடைந்த பரதனது படைகளைக் கண்டு கோபம் கொண்ட குகன் தன் படைகளைத் திரட்டியது வரையுள்ள பகுதியை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) பரதனது படைகளின் சிறப்பு

(ஆ)இராமனுடன் போர் செய்யவே பரதன் வந்தான் எனக் கருதியதால் ஏற்பட்ட குகனது கோப உணர்ச்சி

(இ) அணிகளைக் கையாளுவதில் கம்பரின் கவித்துவ ஆளுமை

(20 புள்ளிகள்)

05.வீரமாமுனிவரின் தேம்பாவணி 'காட்சிப்படல'த்தை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) இடையர் பண்பும் சிறப்பும்

(ஆ) சாந்தியின் வினாக்களுக்கு மரியாள் கூறும் பதில்கள் மூலம் வெளிப்படும் குழந்தை யேசுவின் மாண்நலம்

(இ) உவமையணிக் கையாட்சியின் முக்கியத்துவம்

(ஈ) வீரமாமுனிவரின் கவித்துவ ஆற்றல்

(20 புள்ளிகள்)

06. **ஒரு வெண்மணல் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது** எனும் நாவலை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) நாட்டாரியல் பண்பாட்டுக் கோலங்கள்

(ஆ) அபிராமி மாமி, செல்லையா ஆகிய பாத்திரங்களின் மனவுணர்வுகள்

(இ) காவுதடி, அவணம், குற்றேவல், காண்டவதகனம் ஆகியவற்றுகான பொருள்

(ஈ) இந்நாவலில் பயன்படுத்தப்பட்டுள்ள ஆசிரியரின் மொழிநடைச்சிறப்பு

(20 புள்ளிகள்)

07. வித்துவான் க.வேந்தனாரின் **கவிஞன்** எனும் கவிதையை அடிப்படையாகக் கொண்டு

(அ) நல்லதொரு கவிஞனிடம் இருக்கக் கூடிய பண்புகள்

(ஆ) பயன்பாடற்றுப் போகக் கூடிய கவிதையின் பண்புகள்

(இ) கவிஞரின் கவிச்சிறப்புகள்

(ஈ) அணிகளைக் கையாண்டுள்ள விதம்

ஆகியவற்றைத் தெளிவுபடுத்துக.

(20 புள்ளிகள்)

08. பின்வருவனவற்று இரண்டு பற்றி சிறுகுறிப்பு வரைக.

(அ) கு. அழகிரிசாமியின் **'தியாகம்'** சிறுகதையின் கதைக்கரு எடுத்துரைப்பு முறை.

(ஆ)**சிலப்பதிகாரம் ஊர்காண்காதையில்** கவுந்தியடிகள் கோவலனுக்குக் கூறும் அறிவுரைகளும்,தொன்மக் கதை மரபுகளும்

(இ) **இருதுயரங்கள்** நாடகத்தில் மனோகரன் ,கந்தப்பு பாத்திரங்களின் மனவுணர்வுகள்

(ஈ) **காரணமாலை**யில் திருமக்கமா நாட்டு இயற்கை அழகு

(உ)குறுந்தொகை, "பூவோடு புரையுங் கண்ணும் …" பாடலில் நெய்தல் நிலவிபரிப்பும், தலைவியின் அழகு நலன்களும்.

(20 புள்ளிகள்)



kalvi.lk

கல்குடா கல்வி வலய, பாடசாலைகளின் சுய கற்றல் செயற்பாட்டு பரீட்சைக் குழு
கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை-புதிய பாடத்திட்டம் 2020

தமிழ் 11 (மாதிரிப் பரீட்சை:06)
**Tamil II**

**72 T II**

மூன்று மணித்தியாலம்
மேலதிக வாசிப்பு நேரம்
10 நிமிடம்

- வினாப்பத்திரத்தை வாசித்து,வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமைவழங்கும் விளாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**<u>அறிவுறுத்தல்கள்:</u>**பகுதி I இல் உள்ள **மூன்று** வினாக்களுக்கும் பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கும் எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

பகுதி I

1. ஓவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப்பொருத்த மான விடையைத் தெரிந்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1. அங்காத்தல் மூலம் பிறக்கும் எழுத்து
 1. அ,ஆ 2. அ,ஒ 3. இ,ஈ 4. உ,ஊ 5. எ,ஏ
 (……)

2. சொல்லிடையில் ‘ள’கரம் இரட்டித்து வராத சொல்
 1. கள்ளி 2. வெள்ளம் 3. கிள்ளு 4. பள்ளு 5. பளீல்
 (……)

3. இடைத்தொடர் குற்றியலுகரமாக அமைவது
 1.பெய்து 2.பஞ்சு 3.பற்று 4.வரகு 5.காடு
 (……)

4. வகரமெய் எவ்வுயிர்களுடன் சேர்ந்து மொழிக்கு முதலில் வருவதில்லை
 1. உ,ஊ,ஒ,ஓ 2. உ,ஆ,ஓ,ஔ 3. உ,ஊ,ஒ,ஔ 4. உ,ஊ,அ,ஔ 5. உ,ஒ,ஓ,ஆ
 (……)

5. வேற்றுநிலை மெய்ம்மயக்கத்தில் ட,ற என்பவற்றுடன் மயங்கும் எழுத்துகள்
 1.க்,ச்,ட் 2.க்,ச்,ப் 3.க்,ச்,ம் 4.க்,ச்,த் 5.ஞ்,ச்,ந்
 (……)

6. தனிப்பகுதியாக அமைவது
 1. கொய்யாக்காய் 2. நாடுகின்றார்கள் 3. நீரேரி 4. உரையாசிரியர்கள் 5. கட்டிப்பிடித்தார்கள்
 (……)

7. வினாப்பெயர் அடியாகப் பிறந்த மாற்றுப்பெயராக அமைவது
 1. என்னவாவது 2. எது 3. எவ்வளவு 4. எவற்றால் 5. என்னத்தை
 (……)

8. வினையும் பெயரும் இணைந்து வரும் கூட்டுப்பெயருக்கு உதாரணம்
 1. மின்சாரம் 2. மீன்சந்தை 3. பறிமுதல் 4. பாடசாலை 5. புகைவண்டி
 (……)

9. உவமை உருபு தொக்கு நிற்க இரண்டு பெயர்ச்சொற்கள் இணைந்து உருவாகும் ஒரு சொல்
 1. தங்க்ககாப்பு 2. இரும்புக்கரம் 3. முக்குணம் 4. குளிர்நீர் 5. மரக்கொப்பு
 (……)

10. எதிர்மறை இடைநிலை பெற்று அமையாத சொல்
 1. போகாது 2. வரமாட்டான் 3. போகமாட்டான் 4. நிற்காது 5. போவான்
 (……)

11.பின்வருவனவற்றில் வல்வினையாக வருவது
 1. கேட்போம் 2. படிப்பான் 3. செய்வான் 4. படிக்கின்றான் 5. அழுவான்
 (……)

12.தனிப்பெயரடியைக் கொண்ட வினைச்சொல்
 1. ஆடினான் 2. மாண்டான் 3. போன்றான் 4. கோபித்தான் 5. சென்றான்
 (……)

13.பின்வருவனவற்றுள் உடம்படுமெய் தோன்றிப் புணர்ந்த சொல்
 1. தோட்டை 2. தவ்வை 3. விழியை 4. கல்லை 5. கொல்லை
 (……)



kalvi.lk

14.பின்வருவனவற்றுள் இருவேறு எழுவாய் தொக்கு நிற்கும் வாக்கியம்

1. ஆடி விதை தேடி விதை
2. உப்பிட்டவரை உள்ளளவும் நினை
3. இங்கிருந்து போகேன்
4. பயப்படாதே, தவறாமல் வருவேன்
5. பகலில் பக்கம் பார்த்துப் பேசு இரவில் அதுவும் பேசாதே

(……)

15.பின்வருவனவற்றுள் வழுவுள்ள வாக்கியம்

1. கழனிகளில் நெல் விளைந்திருக்கிறது
2. ஒவ்வொரு பூவும் மலர்ந்தது
2. பாட்டி பனையோலையால் பாய் இழைத்தாள்
4. அவன் சிறிது நாட்களின் பின் நாடு திரும்பினான்
5. இலங்கையின் பண்பாடு உன்னதமானது

(……)

16.பூவின் புது வருவாயையுடைய இளவேனில் காலமானது என்னுடைய தலைவன் இல்லாமல் கழிந்து செல்வதோ! இவ்வாக்கியத்தின் எழுவாய்

1. பூ
2. தலைவன்
3. இளவேனில் காலம்
4. புதுவருவாய்
5. இல்லாமல்

(……)

17.பின்வருவனவற்றுள் கலப்பு வாக்கியம்

1 "மகளே நலமுடன் வாழ்க" என தாய் மனதார வாழ்த்தினார்.
2. மகள் நலமுடன் வாழ தாய் தனது வாழ்த்துக்களை வழங்கினார்.
3. மகள் தனது தாயின் வாழ்த்துக்களைப் பெற்றுக்கொண்டாள்.
4. தனது மகள் நலமுடன் வாழ, தாய் தனது வாழ்த்துக்களை வழங்கினார்.
5. தான் நலமுடன் வாழ மகளே தாயிடம் வாழ்த்துக்களைப் பெற்றுக்கொண்டாள்.

(……)

18.நான் பாடசாலையிலாயினும் வீட்டிலாயினும் இருப்பேன். இதில் 'ஆயினும்' இடைச்சொல் உணர்த்தும் பொருள்

1. விகற்பப் பொருள்
2. பன்மைப் பொருள்
3. முற்றுப்பொருள்
4. வரிசைப்பொருள்
5. திடக்குறிப்பின்மைப் பொருள்

(……)

19. சகல சம்பள ஏற்றங்களும் இடைநிறுத்தப்பட்டுள்ளது என்பது

1. திணை வழுவமைதி
2. பால் வழுவமைதி
3. எண் வழுவமைதி
4. இட வழுவமைதி
5. கால வழுவமைதி

(……)

20.பின்வரும் நிரப்பித் தொடர் வாக்கியங்களில் தொழிற் பெயர்த் தொடர்வகை வாக்கியம் எது

1. நீ நேற்று வரவில்லை என்பது எனக்குத் தெரியும்
2. அப்பா வந்திருக்கிறார் என்ற தகவல் கிடைத்தது
3. குயிலி ஆடிக்கொண்டிருப்பதை எல்லோரும் பார்த்து இரசித்தார்கள்
4. அவன் புத்திசாலி என்பதில் எனக்கு ஐயமில்லை
5. அவன்தான் திருடினான் என்பதற்கு சாட்சியம் எதுவும் இல்லை.

(……)

**02.(அ) பின்வரும் உரைப்பகுதியின் சாராம்சத்தை 50 சொற்களில் சுருக்கி எழுதுக.**

நவீன கவிஞனாக பாரதியைப் ஏற்றுக் கொள்வர். அவரது கவிதைகள் பல, பெண் விடுதலை, பெண் சமத்துவம் பற்றிப் பேசின. அதுமட்டுமன்றி பெண்கள் அரசியலிற் பங்கெடுக்கவும் பதவிகள் வகிக்கவும் வேண்டும் எனக் கூறினார். ஆண்களைப் போலவே அரசியலில் பெண்களுக்கு எல்லாச் சுதந்திரமும் வேண்டும் என்பது அவர் கருத்து. இது இன்றைய நிலையில் முக்கியமான ஒரு கருத்தாகும். அரசியலில் பெண்கள் திட்டமிடல்,தீர்மானமெடுத்தல் ஆகியவற்றுக்கான உரிமை பெற்றிருப்பது பல்வகையாலும் வளர்ச்சி பெற்ற நாடுகளிலும் கூடச் சிறுபான்மையாகவே காணப்படுகின்றது. பெண்களது உரிமையையும் சுதந்திரத்தையும் வேறெந்த நாடுகளையும் விடப் பேணும் சோசலிச நாடுகளிலும் அரசியல் உயர் மட்டத்தில் பெண்கள் பங்கு குறைவாகவேயுள்ளதை ஆய்வாளர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர்.

பாரதியின் பெண்விடுதலைக் கருத்துக்களில் இன்னோர் அம்சமும் உண்டு. பாரதி தனது காலத்தில் இந்தியாவில் மாத்திரமன்றி உலகில் ஏனைய பகுதிகளிலும் தோன்றிய பெண்விடுதலை இயக்கங்கள், கருத்தோட்டங்கள் ஆகியவற்றையும் உன்னிப்பாகக் கவனித்தார். இக்காலத்தில் தோன்றிய பெரும்பாலான மாதர் இயக்கங்கள், பெண்விடுதலைக் கருத்தோட்டங்கள் ஆகியன ஏதோ ஒரு வகையில் அரசியற் பின்னணி கொண்டிருந்தன. ஆசிய நாடுகளிலும் ரஷ்யாவிலும் தோன்றிய மாதர் இயக்கங்களையும் கருத்தோட்டங்களையும் உதாரணங்களாகக் கூறலாம். ஆனால் தனிநபர் சுதந்திரம் என்ற வகையிலும் ஐரோப்பாவில் பெண் விடுதலைக் கருத்துக்கள் தோன்றின.



kalvi.lk

இதன் ஒரு விளைவாக சுதந்திரக் காதல் போன்ற கருத்துக்களும் தோன்றின. ஆண் பெண் உறவில் கட்டற்ற சுதந்திரம் வேண்டும் எனவும் அது பெண் விடுதலையின் ஒரு அம்சம் எனவும் பேசப்பட்டது. உண்மையில் தனிமனித வாதத்தின் ஒரு விளைவாகவே சுதந்திரக் காதல் என்ற கொள்கை தோன்றியது. பாரதி சுதந்திரக் காதல் கொள்கையை வெறுத்தார். இதனை ''பாரதி அறுபத்தாறு'' என்ற நீண்ட கவிதையில் 'விடுதலைக் காதல்' என்ற உபதலைப்பில் பல கருத்துக்களைக் கூறியுள்ளார்.எனவே பாரதியின் கருத்துக்கள் முற்போக்கானதாகவும் திடமானதாகவும் இருந்தன. தமிழ் நின்று நிலைக்கும் வரை பாரதியின் கருத்துக்களும் மக்கள் மனதில் நீங்காத இடத்தைப் பிடிக்கும் என்பதில் வியப்பில்லை. அவரது பங்களிப்பு இன்றைய உலகில் கலங்கரை விளக்குப் போல தென்படுகின்றது.

(13 புள்ளிகள்)

**(ஆ) பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

பழந்தமிழரின் பண்பாடு சிதைந்த காலம் என்பதால் இருண்ட காலம் என அழைப்பர். களப்பிரர் பாளிமொழியை ஆதரித்தமையினால் தமிழர் தம் மொழி,கலை கலாசாரத்தில் சிலகூறுகளை இழக்க நேரிட்டது. தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு முன்னர் போல ஆதரவு கிடைக்கவில்லை. சங்க காலத்தில் இருந்தது தமிழ்ப்பண்பாடாகும். சங்க மருவிய காலத்தில் இருந்தது தமிழ்ப்பண்பாடல்ல.பண்பாடு என்பது காலத்தினால் கொண்டு வரும் விழுமியங்களைத்தாங்கியது. எனினும் அறத்தை மக்களிடம் வலியுறுத்துவது பண்பாடு ஆகாதா? என்பதும் கூறப்படுகின்றது. ஆரியர் கொண்டு வந்த கடவுட்கொள்கை தமிழ் நாட்டில் பரவியது. ஆகவே தான் பண்பாடு சிதைந்த காலமாகக்கொள்ளாது மாற்றமுற்ற காலமாகவே கொள்ளலாம். எந்தவொரு மொழியும் வாழும் மொழியாக இருந்தால் பிறமொழிக்கலப்பு ஏற்படவே வேண்டும் . அவ்வகையில் அந்நியரின் செல்வாக்கினால் தமிழ்ப்பண்பாடு மாற்றமுற்றது என்றே கூறலாம்.

அவைதீக சமயங்கள் அதீத ஆதிக்கம் பெற்றிருந்தமையால் இருண்டகாலம் என அழைப்பர். வைதீக சமயங்களின் போக்கினை மாற்றக் கூடிய விதத்தில் சமணம் பௌத்தம் வளர்ச்சி பெற்றது. சமணப்பள்ளிகளை ஸ்தாபித்தனர். சுமண பௌத்தத்தை வளர்ப்பதற்கு சங்கங்களை நிறுவினர். நூலாக்கங்ளை வளர்ச்சியடையச்செய்தனர். தென்னிந்திய வரலாறு எனும் நூலில் நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள் ''சங்க காலத்திற்குப் பின் தமிழக வரலாற்றில் இருள் சூழ்ந்தது. இந்த இருள் மூன்று நூற்றாண்டுகளுக்கு மேல் தொடர்ந்தது. அந்த நீண்ட இரவுக்குப்பின் தமிழகவரலாற்றில் மீண்டும் ஒளி தோன்றியது.'' எனக்கூறுகிறார். சங்கமருவிய காலத்தில் சிறந்த இலக்கியங்கள் எழவில்லை என்பதனால் இருண்டகாலம் எனக் கூறுவர்.

தமிழ் இலக்கிய வரலாறு எனும் நூலில் பேராசிரியர்.சி.பாலசுப்பிரமணியம் அவர்கள் ''தமிழ் இலக்கிய வரலாற்றிலே இக்காலப்பகுதியில் வளர்ச்சிகுன்றி தமிழ் மொழி புறக்கணிப்பட்டு விளங்கியதால் சிறப்பான நூல்கள் தோன்றவில்லை.'' எனக் கூறுகிறார். எனினும் தமிழில் இரட்டைக்காப்பியங்களான சிலப்பதிகாரம் மணிமேகலை எழுந்தது இக்காலமே. அறநூல்களும் அதிகமாக எழுந்துள்ளன. உலகப் பொது மறையான திருக்குறள் எழுந்ததும் இக்காலமே. திருக்குறள் பல்வேறு மட்டங்களில் உள்ளவர்களை பேசுவதற்கு உகந்த நூலாக உள்ளது. சீர்கேடு அடைந்த தமிழ்ச் சமுதாயத்தை உயரச் செய்வதாக திருக்குறளைக் குறிப்பிடுகின்றனர். இக்காலத்தில் அகம்,புறம்,சைவம்,வைணவம் தான் எழுந்திருக்க வேண்டும் என்று நினைத்திருந்தது தவறான கருத்தாகும்.

(i) தமிழர் தமது கலாசார கூறுகளை ஏன் இழக்க நேரிட்டது?
(ii) தமிழில் பிறமொழிக்கலப்பு ஏன் அவசியம் எனக் கூறப்படுகிறது?
(iii) வைதீக சமயங்களின் போக்கை மாற்றக்கூடிய சக்தி எவற்றுக்கு இருந்ததாகக் கூறப்படுகிறது?
(iv) தமிழ்ச்சமுதாயத்தை உயரச் செய்வதாக குறிப்பிடப்படுவது எது?
(v) ''அந்த நீண்ட இரவுக்குப் பின் தமிழக வரலாற்றில் மீண்டும் ஒளி தோன்றியது'' என்பதன் மூலம் நீர் கருதுவது யாது?

(12 புள்ளிகள்)

03.பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 300-350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.
(அ) போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தல்
(ஆ) தமிழ் இலக்கியங்களில் பெண்களின் பங்களிப்பு
(இ) பல்லினப் பண்பாடும் சமூக ஒருமைப்பாடும்
(ஈ) தமிழ்மொழி வளர்ச்சியில் ஊடகங்கள்
(உ) பெருகி வரும் சனத்தொகையும் வீதி விபத்துகளும்

(25 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி 11

04. (அ) சங்க கால புறத்திணை இலக்கியங்களைக் குறிப்பிட்டு,புறத்திணைப் பொருள் மரபை சுருக்கமாக விளக்குக.

(ஆ) சங்க இலக்கியங்களில் பயின்றுவந்த உள்ளுறை உவமை, இறைச்சி அணிகளை சங்க இலக்கியச்சான்று தந்து விளக்குக.

(இ) பரிபாடலை புறத்திணை இலக்கியமெனக் கொள்வது எவ்வாறு பொருந்தும் என்பதை பரிசீலிக்குக.

(15 புள்ளிகள்)

05.(அ)விஜயநகர நாயக்கர் காலத்தில் எழுந்த பொதுமக்கள் சார்புடைய இலக்கியங்கள் குறித்து சுருக்கமாக விளக்குக.

(ஆ) நாயக்கர் காலத்தில் தமிழ் வளர்த்த ஆதீனங்களையும் அரசர்களையும் குறிப்பிட்டு விளக்குக.

(இ) தமிழ்மொழியும் தமிழ் இலக்கியமும் வளர்வதற்கு ஐரோப்பிய அறிஞர்கள் ஆற்றிய பங்களிப்புக் குறித்துக் கருத்துரைக்குக.

(15 புள்ளிகள்)

06.(அ)ஒல்லாந்தர் காலத்தில் அதிகளவில் சமயச்சார்பான இலக்கியங்கள் எழுந்தமைக்கான காரணங்கள் எவை?

(ஆ) இலங்கையில் தோன்றிய தமிழ்ப் புராணங்கள் பற்றி கருத்துரை வழங்குக.

(இ) இலங்கையில் பத்தொன்பதாம் நூற்றாண்டு தமிழ் இலக்கிய வளர்ச்சியில் அச்சியந்திரம் பெறும் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுக.

(15 புள்ளிகள்)

07.பின்வருவோரில் யாரேனும் இருவர் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுக.

(அ) ஆறுமுகநாவலர்
(ஆ) சி.வை.தமோதரம்பிள்ளை
(இ) அறிஞர் எம்.சி.சித்திலெப்பை
(ஈ) சி.வி. வேலுப்பிள்ளை

(15 புள்ளிகள்)

08.(அ) (i) பின்வரும் வாக்கியத்தில் உள்ள பொருள் மயக்கத்தை நீக்கி எழுதுக.
மாதவன் போன கொழும்பு செய்தி பரவியது

(ii) பின்வரும் தொடர்களை ஒரே வாக்கியமாக எழுதுக.
= நான் ஊருக்குப் போனேன்.
= அம்மாவையும் பார்த்து அப்பாவையும் பார்த்து வந்தேன்.
= வீட்டுக்குத்திரும்பி வந்து நன்றாகச் சாப்பிட்டேன்.

(iii) பின்வரும் வாக்கியங்களை இணைக்கும் இணைப்பிடை சொற்களையிட்டு மீண்டும் வாக்கியத்தை எழுதுக.
= அவள் நன்றாகப் பரீட்சைக்குப் படித்தாள்.
= அவள் சித்தியடையத் தவறி விட்டாள்.
= அவள் மீண்டும் முயற்சி செய்வதைக் கைவிடவில்லை.

(iv) செயற்பாட்டு வினை வாக்கியத்தை செய்வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.
"சமூக வலைத்தளங்களால் வதந்திகள் கட்டுப்படுத்தப்பட்டன."

(v) பின்வரும் வாக்கியத்தில் உள்ள வழுவைச் சுட்டிக்காட்டி, வழுவை நீக்கி எழுதுக.
"காணாமல் ஆக்கப்பட்ட தொழிற்சாலை ஊழியர்கள் வேலைகள் ஸ்தம்பிதம் அடைந்து விட்டன."

(ஆ) பின்வருவனவற்றுள் ஏதேனும் **ஒன்று** பற்றி சிறுகுறிப்பு எழுதுக.
(i) வினையடை
(ii) எதிர்மறை வினைமுற்று
(iii) பால்பகா அஃறிணைப் பெயர்கள்

(15 புள்ளிகள்)



kalvi.lk

Education
கல்வி
අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page